**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம் இராமநாதபுரம்**

**முன்னிலை திரு.S.B. சுஜித், B.A. B.L.(Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்**
**நீதித்துறை நடுவர் எண்.2(முகூபொ),**
**இராமநாதபுரம்.**

2026 ம் வருடம் மார்ச் மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை

Cr.M.P. No. 266/2026

CNR No. TNRM02-000792-2026

செந்தில்குமார்,
த/பெ. செல்வராஜ்
1/23 மெயின்ரோடு,
காட்டுர் மலையாண்டி பட்டிணம்,
ஆணைமலை,
கோயம்புத்தூர் மாவட்டம் ..... மனுதாரர்/எதிரி

எதிர்

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
சைபர் கிரைம் காவல் நிலையம்,
இராமநாதபுரம்
குற்ற எண். 12/2025 .... எதிர்மனுதாரர்/குற்றம் முறையிடுவோர்

**உத்தரவு**

**1.** நிபந்தனையை ரத்து செய்ய கோரிய மனுவும் மற்றும் பதில் அறிவிப்பும் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தனது மனுவில் மனுதாரர் மீது குற்றமுறையிடுவோரால் பிரிவுகள் 318(4) BNS and 66D IT Act 2008 ன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் சார்பாக சமூகம் நீதிமன்றத்தில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டு அவை அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் குற்றமுறையிடுவோர் காவல் நிலையத்தில் மாதத்தின் இரண்டு

திங்கட்கிழமைகளில் கையெழுத்து செய்து வரவேண்டும் என்று கடந்த 12.01.2026 ம் தேதி Cr.M.P. No. 30/2026 ன் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

**2.** அதன் அடிப்படையில் மனுதாரர்/எதிரி 25.01.2026 ம் தேதியன்று இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் ஜாமீன் கொடுத்து பிணையில் வந்து இம்மனுதாரர்/எதிரி எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் மாதத்தின் இரண்டு திங்கட்கிழமைகளில் கையெழுத்து செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனுதாரர்/எதிரி கடந்த 26.01.2026, 09.02.2026, 23.02.2026 ம் ஆகிய தேதிகளில் கையொப்பம் செய்து வருகிறார் என்றும் இந்நிலையில் இம்மனுதாரர்/எதிரிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டும், வலிப்பு நோய் ஏற்பட்டு இருந்து வருவதால் அடுத்தவர் உதவியின்றி செல்ல இயலாததால் தொடர்ந்து கையெழுத்து செய்ய இயலாத சூழ்நிலையில் இருந்து வருகிறார் என்றும் மனுதாரர்/எதிரி கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவர் என்றும் மேற்படி மனுதாரர்/எதிரி எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் ஆஜராகி கையொப்பம் செய்து வருவதால் கஷ்டஜீவனம் செய்து வருகிறார் என்றும் மனுதாரர்/எதிரி மீது 12.01.2026 ம் தேதி Cr.M.P No. 30/2026 ல் விதித்த நிபந்தனையை முற்றிலும் தளர்த்திட வேண்டுமாறு மனுதாரர்/எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு பதில் பெறப்பட்டது அந்த பதில் மனுவில் நீதிமன்ற உத்தரவுப்படி நீதிமன்றக்காவலில் இருந்தவர் ஜாமீனில் வெளியே சென்ற நாளிலிருந்து சைபர் கிரைம் காவல்நிலையத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு திங்கள் கிழமையும் காலை 10 மணிக்கு கையொப்பம் செய்ய வேண்டும் என்ற உத்தரவினை ஏற்று எதிரியானவர் 26.01.2026, 09.01.2026, 23.02.2026 ஆகிய நாட்களில் கையொப்பம் இட்டு வந்துள்ளார் என்றும் மேற்படி எதிரி கையெழுத்து போடவதில் இருந்து தளர்வு வழங்கினால் எதிரி வெளியூரில் இருப்பதாலும், விசாரணைக்கு ஒத்துழைக்க மாட்டார் என்பதாலும் எதிரியானவர் இது போன்ற பலரிடம் பங்கு சந்தையில்

முதலீடு செய்தால் அதிக லாபத்தில் பணம் சம்பாதிக்கலாம் என்று ஏமாற்றி பணத்தினை பெறும் குணமுடையவர் என்பதாலும், இந்த வழக்கில் தொடர்புடைய சாட்சிகளை கலைக்க கூடும் என்பதாலும் எதிரியை பிணையில் விட்டால் இதே போன்ற குற்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபடக்கூடும் என்பதால் பிணை தளர்வு வழங்க கடுமையாக ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி நீதிமன்ற நிபந்தனையின் பேரில் 26.01.2026, 09.01.2026, 23.02.2026 ஆகிய நாட்களில் 15 நாட்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு திங்கள் கிழமையும் காலை 10 மணிக்கு சைபர் கிரைம் காவல்நிலையத்தில் கையொப்பம் போட்டு வருவதாக பதில் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும் இம்மனுதாரர்/எதிரிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டும், வலிப்பு நோய் ஏற்பட்டு இருந்து வருவதால் அடுத்தவர் உதவியின்றி செல்ல இயலாததால் தொடர்ந்து கையெழுத்து செய்ய இயலாத சூழ்நிலையில் இருந்து வருகிறார் என்று மனுதாரர்/எதிரி தரப்பில் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும் 15 நாட்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு திங்கள் கிழமையும் காலை 10 மணிக்கு சைபர் கிரைம் காவல்நிலையத்தில் கையெழுத்து செய்து வரும் நிபந்தனையை முழுமையாக தளர்வு செய்தும், நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரும்போது தவறாமல் ஆஜர் ஆக வேண்டுமென்று நிபந்தனையுடன் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் வருடம் மார்ச் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.13 18:04:33 +0530

நீதித்துறை நடுவர் எண்.II(FAC)
இராமநாதபுரம்.